# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 18.03.2026**

**MCOP No. : 167/2021**

**Pw : 1**

**Name : திரு. சேதுராஜா**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சமயத்தில் நான் ஐ.டி.ஐ படித்துக்கொண்டிருந்தேன். தற்போது வீட்டில்தான் உள்ளேன், வேலைக்கு செல்லவில்லை. விபத்துசமயம் எனது படிப்பு தடைப்பட்டதை காட்டக்கூடிய ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிசென்றேன். விபத்து சமயத்தில் எனக்கு 17 வயது, அப்போது எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். விபத்துசமயம் நான் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிசென்றேன், எதிர்திசையில் வந்த இருசக்கர வாகன ஓட்டுநர் மதுபோதையில் அஜாக்கிரதையாக ஓட்டிவந்து என் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். விபத்தின் காரணமாக இரு ஓட்டுநர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனது அப்பா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்ட காரணத்தினாலும், அப்போது நான் இளவர் என்ற காரணத்தினாலும் எதிரே வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநரின் கவனக்குறைவால்விபத்து ஏற்பட்டதாக என் அப்பாவால் ஒரு பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. என்னுடைய கவனக்குறைவு மற்றும் அதிவேகம்தான் விபத்திற்கு காரணம் என்றும், 1ம் எதிர்மனுதாரர் மேற்படி விபத்திற்கு காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் நான் ஓட்டிசென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, குற்றவழக்கில் தயார் செய்யப்பட்ட பார்வை மகசர், மாதிரி வரைபடம், குற்ற இறுதி அறிக்கை ஆகியவற்றை வேண்டுமென்றே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டிசென்ற இருசக்கர வாகனம் எனது பெரியப்பாவின் நண்பருக்கு சொந்தமானதாகும். நான் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரை கட்சி சேர்க்காத காரணத்தினால் இம்மனு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் நான் தாக்கல் செய்த மனுவில் காலம் எண்.14, 15, 16, 16 ஏ ஆகியவற்றில் இருசக்கர வாகனங்களின் உரிமையாளர் மற்றும் பிற விவரங்கள் குறிப்பிடப்படாத காரணத்தினல் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகி தற்போது நான் நல்ல உடல்நிலையில் உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு கழகம் எனக்கு இழப்பீடு வழங்க தேவையில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகையானது என்றும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi